IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO. 167/2023

Deposition of Witness for P.W.1

| | | |
|---|---|---|
| NAME | - | திருமதி.ஆண்டாள் |
| HUSBAND NAME | - | திரு.கோவிந்தன் |
| VILLAGE | - | சத்துவாச்சாரி, வேலூர் |
| TALUK | - | வேலூர் |
| OCCUPATION | - | Home maker |
| AGE | - | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.08.2025.

எதிரிகள் 2 முதல் 6 ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை மனு ஏற்பு.

<u>முதல் விசாரணை –</u>

நான் சத்துவாச்சாரி, விஜயராகபுரத்தில் குடியிருக்கிறேன். புகார்தாரர் கோவிந்தன் எனது கணவர். எனது கணவர் 2 வருடத்திற்கு முன்பு உடல் நிலை சரியில்லாமல் இறந்து விட்டார். 20.04.2019 அன்று எதிரி கணேஷ் எனது மகன் செல்வராஜ்ஜை வீட்டிலிருந்து கூப்பிட்டார். மாலை 1 மணி நேரம் கழித்து என் மகனை வெட்டிவிட்டதாக இளைய மகன் ரமேஷ் பார்த்து வந்து சொன்னார். நான், எனது மகன் ,எனது கணவர் பால்பண்ணை கேட்டிற்கு வந்து பார்த்த போது எனது மகன் வெட்டப்பட்டு இரத்த வெள்ளத்தில் இருந்தார். எனது கணவர் எனது மகனைப் பார்த்து யார் இந்தமாதிரி செய்தது என்று கேட்டதற்கு எதிரி யுவராஜ் தான் தன்னை வெட்டியதாக சொன்னார். உடனே ஆம்புலன்ஸில் ஏற்றி அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். எனது

ஆண்டாள்

கணவர் இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை– எதிரிகள் தரப்பு

சத்துவாச்சாரியில் உள்ள தேசிய நெடுஞ்சாலை கிழக்கு–மேற்காக உள்ளது. சாலையின் வட புறத்தில் கங்கை அம்மன் கோவில் உள்ளது. தெற்கு புறம் பால்பண்ணை உள்ளது. நான் சம்பவ இடத்திற்கு வந்து என் மகனை பார்த்த போது போலீசார் அங்கு இருந்தார்கள். அப்போது நாங்கள் யார் என்று போலீசார் விசாரித்தார்கள். பால்பண்ணைக்கும் எனது வீட்டிற்கும் 1/2 கி.மீ க்கு குறைவாக தான் இருக்கும். மருத்துவமனையில் போலீசார் எங்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். போலீசார் விசாரணையில் எங்கள் தெருவில் செல்வி என்பவரது வீட்டில் வெடிகுண்டு வைத்ததாக எனது மகன் மீது வழக்கு உள்ளதாக சொன்னேன். எனது மகன் செல்வராஜ் அவரது மாமனார் வீட்டை கொழுத்தி விட்டதாக கே.வி.குப்பம் காவல் நிலையத்தில் ஒரு வழக்கு உள்ளது என்றால் சரி. செல்வராஜ் தனது மாமனாரை கொலை செய்து விட்டதாக ஒரு வழக்கு உள்ளது என்றால் சரி. தேரை எரித்ததாக எனது மகன் செல்வராஜ் மீது வழக்கு உள்ளது. எனது மகனுக்கு பல எதிரிகள் இருக்கிறார்கள். 20.04.2019 அன்று எதிரி கணேசன் எனது மகனை வீட்டிலிருந்தது மாலை 5.30 மணிக்கு கூட்டி சென்றதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி யுவராஜ் எனது மகனை கொலை செய்யவில்லை என்றும் நானாக எனது மகன் யுவராஜ் தான் தன்னை கொலை செய்ததாக

என் கணவரிடம் சொன்னதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 06.08.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

6.8.25

**Additional District Judge(FTC)**
**Vellore.**